*கவனிக்க.-* இவ்வர்த்தமானியின் பகுதி VI இல் 2017 ஆம் ஆண்டுக்குரிய குருநாகல் மற்றும் குளியாப்பிட்டி நீதாசன வலயங்களுக்குரிய யூரிமார் பெயர்ப்பட்டியலொன்று மும்மொழிகளிலும் பிரசுரிக்கப்பட்டுள்ளது

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2033 - 2017 අගෝස්තු මස 18 වැනි සිකුරාදා - 2017.08.18

*2033 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1232 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவுத் திரட்டுகள் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | | | |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 1240 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் | | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


*கவனிக்க.-* சுக்யோ மகிகறி சிறிலங்கா (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2017, ஒகத்து மாதம் 4 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2017, செத்தெம்பர் மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2017, ஒகத்து மாதம் 25 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# பதவிகள் - வெற்றிடம்

## களுத்துறை நகர சபை

களுத்துறை நகர சபையில் கீழ்க் குறிப்பிடப்பட்ட பதவிகளின் வெற்றிடங்களுக்காக இவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள மேல்மாகாணத்தின் நிரந்தரமாக வதிவோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. (களுத்துறை நகர சபைப் பிரதேசத்திற்குள் அண்மித்த மூன்று வருடங்கள் நிரந்தரமாக வசிக்கும் விண்ணப்பதாரர்களுக்கு மட்டும் தற்போது இச்சபையில் பதிலீடு, ஒப்பந்தம் அல்லது செயற்திட்ட அடிப்படையில் சேவையாற்றுவோர் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும்.

| தொ. இல. | சேவை வகை மற்றும் பதவியின் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | கல்வித் தகைமை - உள்ளக | ஏனைய தகைமைகள் | சம்பள அளவு மற்றும் குறியீட்டு இலக்கம் | ஆட்சேர்ப்பு |
|---|---|---|---|---|---|---|
| 1 | ஆரம்பத் தரம் - திறனற்ற அலுவலக ஊழியர் சேவை தரம் III | 4 | கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாது (02) இரு திறமைச் சித்திகளுடன் (06) ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல். (இதில் 05 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருக்க வேண்டும்) | | PL1 - 2016 ரூபா 24,250- 250X10- 270X10- 300X10- 330X12- ரூபா 36,410 | கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் மூலம் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப் படும். (இதன் போது கல்வித் தகைமைகள், தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திலான சமகால நிகழ்வுகள் தொடர்பான பொதுவான அறிவு கருத்திற் கொள்ளப் படும். இதற்கு மேலதிகமாக பதவிக்குரிய ஆளுமை தொடர்பில் கருத்திற் கொள்ளப் படும்.) |
| 2. | ஆரம்பத் தரம் திறனற்றபணி / வெளிக்கள தொழிலாளர் தரம் III | 5 | 8 ஆம் தரம் (9 ஆம் ஆண்டு) சித்தியடைந்திருக்க வேண்டும். | | PL1- 2016 ரூபா 24,250- 250X10- 270X10- 300X10- 330X12- ரூபா 36,410 | கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் மூலம் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும். (இதன் போது உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களில் சமயாசமய, பதிலீடு, ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றியுள்ள சேவைக் காலத்தை பதவிக்குரியதாக பெற்றுள்ள அநுபவம், தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திலான சமகால நிகழ்வுகள் தொடர்பில் பொதுவான அறிவு கருத்திற் கொள்ளப்படும்.) |

| தொ. இல. | சேவை வகை மற்றும் பதவியின் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | கல்வித் தகைமை - உள்ளக | ஏனைய தகைமைகள் | சம்பள அளவு மற்றும் குறியீட்டு இலக்கம் | ஆட்சேர்ப்பு |
|---|---|---|---|---|---|---|
| 3. | ஆரம்பத் தரம் திறனற்ற சுகாதாரத் தொழிலாளர் தரம் III | 2 | 8 ஆம் தரம் (9 ஆம் ஆண்டு) சித்தியடைந்திருக்க வேண்டும். | | PL 1 - 2016 ரூபா 24,250 - 250X10- 270X10- 300X10- 330X12- ரூபா 36,410 | கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் மூலம் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும். (இதன் போது உள்ளூராட்சி மன்ற நிறுவனங் களில் சமயாசமய, பதிலீடு, ஒப்பந்த அடிப்படையில் சேவை யாற்றியுள்ள சேவைக் காலத்தை பதவிக்குரி யதாக பெற்றுள்ள அனுபவம், தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திலான சமகால நிகழ்வுகள் தொடர்பில் பொதுவான அறிவு கருத்தில் கொள்ளப் படும்.) |
| 4 | ஆரம்பத் தரம் தேர்ச்சி பெற்ற சாரதி III | 2 | இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சிங்களம்/தமிழ் மொழி உள்ளிட்ட இரண்டு (2) திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் (6) சித்தியடைந்திருத்தல் வேண்டும். (ஒரே அமர்வில் ஆகக் குறைந்தது ஐந்து (5) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.) | (அ.) தனிப்பட்ட/ வாடகை வண்டி மற்றும் தார் நிறை 24 அந்தருக்கு குறைந்த ஸ்டேசன் வெகன் வண்டி ஓட்டுதல் தொடர்பாக மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் அவர்களின் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். (ஆட்சேர்ப்புத் திகதிக்கு மூன்று (3)ஆண்டுகளுக்கு முன்னர் ஆகக்குறைந்தது "சீ" மற்றும் "சீ 1" வாகன வகுப்பின் அனுமதிப் | PL 3 - 2016 ரூபா25,790- 270X10- 300X10- 330X10- 350X12- ரூபா 38,990 | தொழில்சார் பரீட்சை மற்றும் சாதாரண நேர்முகப் பரீட்சை மூலம் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும். தொழில் சார் பரீட்சையில் கீழ்க்குறிப்பிடப்படும் விடயங்கள் தொடர்பாக கருத்தில் கொள்ளப்படும்.<br><br>(i) வாகனம் ஓட்டும் திறன்<br><br>(ii) வீதி சட்டங்கள் தொடர்பான செய்முறை பரீட்சை<br><br>(iii) மோட்டார் இயந்திரவியல் தொடர்பான அடிப்படை அறிவு |

| தொ. இல. | சேவை வகை மற்றும் பதவியின் பெயர் | வெற்றிடங் களின் எண்ணிக்கை | கல்வித் தகைமை - உள்ளக | ஏனைய தகைமைகள் | சம்பள அளவு மற்றும் குறியீட்டு இலக்கம் | ஆட்சேர்ப்பு |
|---|---|---|---|---|---|---|
| | | | | பத்திரம், புதிய சாரதி அனுமதிப் பத்திரம் பிரகாரம்“பீ” வகுப்பின் அனுமதிப் பத்திரம் பெற்றிருத் தல் வேண்டும்)<br><br>(ஆ) வீதி சட்டக் கோவை தொடர்பாக சிறந்த அறிவு இருத்தல் வேண்டும்.<br><br>(இ) **அநுபவம்**<br>சாரதி அனுமதிப் பத்திரம் பெற்ற தன் பின்னர் சாரதியாக மூன்று (3) ஆண்டு காலம் அனுபவம் இருத்தல் வேண்டும்.<br><br>**உடற்தகைமைகள்**<br>ஆகக் குறைந்ததாக உயரம் ஐந்து (5) அடியாவது இருத்தல் வேண்டும். பகல் நேரங் களிலும்இரவு நேரங் களிலும் சேவையில் ஈடுபடுவதற்கு முடியு மானவாறு சிறந்த உடல் ஆரோக்கி யத்துடன் இருத்தல் வேண்டு மென்பதுடன், நல்ல கண்பார்வை உடைய வராக இருத்தல் வேண்டும். (அரசாங்கத்தின் மருத்துவரால் வழங்கிய மருத்துவ சான்றிதழ்) | | |

| தொ. இல. | சேவை வகை மற்றும் பதவியின் பெயர் | வெற்றிடங் களின் எண்ணிக்கை | கல்வித் தகைமை - உள்ளக | ஏனைய தகைமைகள் | சம்பள அளவு மற்றும் குறியீட்டு இலக்கம் | ஆட்சேர்ப்பு |
|---|---|---|---|---|---|---|
| 5. | ஆரம்ப தரம் தேர்ச்சிபெற்ற மின் தொழில்நுட்ப வியலாளர் III | 1 | (i) தேசிய பொது சான்றிதழ் (சாதாரண தர) பரீட்சையில் அல்லது கல்விப் பொது தராதர (சாதாரண தர)ப் பரீட்சையில் எந்தவொரு இரண்டு (02) பாடங்களுக்கும் திறமைச் சித்திகளுடன் ஆறு (6) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இதில் ஐந்து (5) பாடங்களை ஒரே அமர்வில் சித்தியடைந் திருத்தல் வேண்டும்.<br><br>மற்றும்<br><br>(ii) பதவிக்கு ஏற்புடையதாக ஆகக்குறைந்தது இரண்டு ஆண்டுகள் (2) அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். (அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்ட நிறுவன சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.) | தொழில்சார் தகைமைகள் :<br><br>(i) தொழிலுக்கு ஏற்புடையதாக தேசிய தொழில் சார் தகைமை களை (NVQ) 3 ஆவது மட்டத்தின் சான்றிதழை பெற்றிருத்தல் வேண்டும்.<br>அல்லது<br><br>(ii) தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்றுவிக்கும் திணைக்களத்தின் (DTET)தொழிலுக்கு ஏற்புடையதாக ஓராண்டுக்கு குறையாத பாடநெறியை கற்று சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்<br>அல்லது<br><br>(iii) தேசிய இளைஞர் மன்றத்தில் (NYSC) தொழிலுக்கு ஏற்பு டையதாக ஓராண் டுக்கு குறையாத பாடநெறியை கற்று சான்றிதழ் பெற் றிருத்தல் வேண்டும்.<br>அல்லது<br><br>(iv) இலங்கை தொழில்சார் பயிற்சி அதிகார சபையில் (VTA) தொழிலுக்கு ஏற்புடையதாக ஓராண்டுக்கு குறையாத பாடநெறியை கற்று | PL 3 - 2016<br>ரூ. 25,790 - 270X10- 300X10- 330X10- 350X12- ரூ. 38,990 | மேற்படி தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப் பதாரிகளிடத்தில் உள்ளக விண்ணப்பதாரிகளை எழுத்திலான மற்றும் செய்முறையிலான பரீட் சைக்கு உட்படுத்தி அதில் திறமையுடையவர்களைக் கொண்டு வெற்றிடங்கள் நிரப்பப்படும்.<br><br>அவ்வாறு உள்ளக ஊழியர் களிடத்தில் வெற்றிடங் களை நிரப்புவதற்கு முடியாத சந்தர்ப்பங்களில் குறிப்பிடப்படும் தகைமை களை பூர்த்தி செய்கின்ற வெளிவாரி விண்ணப் பத்தாரிகளை எழுத்திலான மற்றும் செய்முறையிலான பரீட்சைக்கு உட்படுத்தி அதில் ஆகக் கூடிய திறமை யுடையவர்களை கொண்டு வெற்றிடங்கள் நிரப்பப் படும். |

| தொ. இல. | சேவை வகை மற்றும் பதவியின் பெயர் | வெற்றிடங் களின் எண்ணிக்கை | கல்வித் தகைமை - உள்ளக | ஏனைய தகைமைகள் | சம்பள அளவு மற்றும் குறியீட்டு இலக்கம் | ஆட்சேர்ப்பு |
|---|---|---|---|---|---|---|
| | | | | சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். அல்லது<br><br>(v) தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் (NAITA) தொழிலுக்கு ஏற்புடையதாக ஓராண்டுக்கு குறையாத பாடநெறியை கற்று சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். அல்லது<br><br>(vi) மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக் குழுவில் பதிவு செய்யப்பட்ட கைத்தொழில் பயிற்சி நிறுவனத்தின் தொழிலுக்கு ஏற்புடையதாக ஓராண்டுக்கு குறையாத பாடநெறியினை பூர்த்தி செய்து சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். | | |

***02. ஆட்சேர்ப்பு செய்வதற்கான பொதுவான நிபந்தனைகள் :***

(i) விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும்.

(ii) விண்ணப்பப்படிவங்களைப் பொறுப்பேற்கும் இறுதித் தினத்துக்கு அண்மித்த 3 வருட காலத்திற்கு மேல்மாகாணத்தில் நிரந்தரமாக வதிய வேண்டும்.

(iii) களுத்துறை நகர சபை அதிகாரப் பிரதேசத்தில் நிரந்தரமாக வதிவோர் தொடர்பில் முன்னுரிமை வழங்கப்படும்.

(iv) விண்ணப்பப்படிவத்தைப் பொறுப்பேற்கும் தினத்தன்று 18 வயதை விடக் குறையாது 45 வயதை விட மேற்படாதிருக்க வேண்டும். (தற்போது அரச சேவையில் நிரந்தரப் பதவி வகிப்போருக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை கருத்திற் கொள்ளப்படமாட்டாது)

(v) களுத்துறை நகர சபையில் தற்போது சமயாசமய, பதிலீடு, ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றும் ஊழியர்கள் தொடர்பில் முன்னுரிமை வழங்கப்படும்.

(vi) விண்ணப்பதாரர்கள் சிறந்த பழக்கவழக்கங்கள் மற்றும் பதவிகள் கடமையை நிறைவேற்ற போதியளவு உடல் உளத் தகைமை கொண்டவராக இருக்க வேண்டும்.

(vii) தண்டனைச் சட்டக் கோவையின் கீழ் நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டு தண்டனை வழங்கப்பட்டவராக இருக்கக்கூடாது.

(viii) அரச அல்லது உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களில் சேவையிலிருந்து நீக்கப்படாதவராக இருக்க வேண்டும்.

(ix) பொது நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 44/90 இன் கீழ் ஓய்வு பெற்றவராக இருக்கக்கூடாது.

(x) சேவையின் தேவைகளுக்கமைய முறையான மற்றும் நேர்முகப் பரீட்சை மற்றும் பிரயோகப் பரீட்சையில் ஈடுபடுத்தப்படுவதுடன் இதன்போது பெற்றுக் கொள்ளப்படும் உயரிய புள்ளிகளுக்கமைய தகைமைபெற்றோர் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

(xi) அவ்வவ் பதவிக்குச் சேர்த்துக் கொள்வதற்குத் தேவையான சகல குறைந்தபட்ச தகைமைகளையும் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தினத்திற்குள் சகல முறைகளிலும் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

(xii) விண்ணப்பம் கோரப்பட்டதன் பின்னர் அல்லது கோரப்படும் வேளையில் மேல்மாகாணத்தில் இப்பதவிகளுக்குரியதாக புதிய ஆட்சேர்ப்பு ஒழுங்கு விதிமுறைகள் பிரமாணக் குறிப்பு மறுசீரமைப்பு மற்றும் பிரமாணக் குறிப்பினை பதிலீடு செய்யும்போது ஆட்சேர்ப்புத் தாமதம், மாற்றங்கள் மற்றும் இவ் அறிவித்தலை இரத்துச் செய்தல் அல்லது மறுசீரமைக்கும் அதிகாரம் களுத்துறை சகர சபையின் செயலாளருக்குரியதாகும்.

**3. சேவையில் ஈடுபடுவதற்கான பொதுவான நிபந்தனைகள் :**

(i) இப்பதவி நிரந்தரமானது ஓய்வூதிய சம்பளம் கொண்டது. விதவை/அநாதை/தபுதாரர்/அநாதை முறைக்கமைய பங்காளர் நிதி செலுத்தப்பட வேண்டும்.

(ii) ஆட்சேர்ப்பு செய்யும் ஊழியர்கள் மூன்று ஆண்டு கால தகுதிகாண் காலத்திற்குட்படுவர். நிரந்தர ஊழியர்கள் ஒரு வருடகால பதில் காலத்திற்குட்படுவர்.

(iii) அரசகரும மொழிக் கொள்கைக்குட்பட வேண்டும்.

(iv) பதவிகளுக்குரியதான சம்பள அளவு 2016.01.01 ஆந் திகதி தொடக்கம் செலுத்தப்படும் பொதுநிர்வாகச் சுற்றறிக்கை 3/2016 இல் II வது உப ஆவணத்திற்கமைவாக இருக்க வேண்டும். இச்சம்பள அளவு முழுமையாக அமுல்படுத்தப்படுவது 2020.01.01 ஆந் திகதி தொடக்கமாகும்.

(v) இதற்கு மேலதிகமாக தாபன விதிக் கோவையின் ஒழுங்கு விதிகளுக்கும், நிதிபிரமாணங்களுக்கும் மேல்மாகாண சபையின் கௌரவ ஆளுநரின் உத்தரவுகளுக்கும் மாகாண அரச சேவை ஆணைக்குழுவினால் காலத்துக்குக் காலம் விதிக்கப்படும் ஏனைய கட்டளைகளுக்கும், திணைக்களக் கட்டளைகளுக்கும் களுத்துறை நகர சபையினால் காலத்துக்குக் காலம் விடுக்கப்படும் ஒழுங்குக் கோவைகள் மற்றும் கட்டளைகளுக்கும் அமைய செயற்படக் கட்டுப்பட வேண்டும்.

**4. விண்ணப்பிக்க வேண்டிய முறைகள் :**

இவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கமைய (A4 அளவு) விண்ணப்பப் படிவத்தைத் தயாரித்து விண்ணப்பப்படிவத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல்மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட்டு 2017.09.02 ஆந் திகதிக்கு முன்னர் "செயலாளர், களுத்துறை நகர சபை, களுத்துறை" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். ஏற்கனவே அரச சேவையில்/மாகாண அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பப்படிவத்தை நிறுவனப் பொறுப்பாளர் ஊடாக அனுப்ப வேண்டும்.

உரிய தினத்திற்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்கள் மற்றும் முறையாகப் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் எதுவித முன்னறிவித்தல் இன்றி நிராகரிக்கப்படும்.

விண்ணப்பப்படிவத்துடன் கீழ்க் குறிப்பிடப்பட்ட ஆவணத்தின் பிரதிகள் அனுப்பப்பட வேண்டும்.

(i) பிறப்புச் சான்றிதழ் ;
(ii) தேசிய அடையாள அட்டையின் போட்டோப் பிரதி ;
(iii) கல்விச் சான்றிதழ்/பாடசாலையை விட்டு விலகிய சான்றிதழ் ;
(iv) பிரதேச செயலாளரினால் கையொப்பம் இடப்பட்ட கிராம அலுவலரினால் வழங்கப்பட்ட வதிவிடத்தை உறுதிப்படுத்திய சான்றிதழ் ;
(v) ஏனைய தகைமைகளைக் குறிப்பிடும் சான்றிதழ் ;
(vi) சேவை அனுபவம் தொடர்பான சான்றிதழ் ;
(vii) ஒரு மாதத்திற்குள் பெற்றுக்கொண்ட இரண்டு நன்னடத்தைச் சான்றிதழ்கள் ;
(viii) பொலிஸ் அறிக்கை.

05. வெற்றிட எண்ணிக்கைக்கமைய நேர்முகப் பரீட்சைக்கு/பிரயோகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதுடன் அவ்வாறு அழைக்கப்படுவதன் மூலம் தாங்கள் நியமனத்தைப் பெறுவதற்கான சகல தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளீர்கள் என்பதைக் கருத்திற் கொண்டல்ல.

இவ் ஆட்சேர்ப்பு தொடர்பிலான ஒழுங்கு விதிமுறைகளில் வகுக்கப்படாத விடயங்கள் தொடர்பில் இறுதித் தீர்மானம் களுத்துறை நகர சபைச் செயலாளரினால் எடுக்கப்படும் தீர்மானமாகும்.

**கீதானி டி. லொகுவெல்ல**
செயலாளர் மற்றும் சபையின் அதிகாரச்
செயற்பாடுகளை
அமுல்படுத்தும் உத்தியோகத்தர்,
நகர சபை, களுத்துறை.

நகர சபை அலுவலகம்,
களுத்துறை,
2016, ஒகத்து.

**களுத்துறை நகர சபையில்................................... பதவிக்கான மாதிரி விண்ணப்பப்படிவம்**

01. (i) முதலெழுத்துக்களுடன் பெயர் :- ..............................................................................
(ii) முதலெழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர்கள் :- ..........................................................
02. நிரந்தர முகவரி :- ..........................................................................................................
03. கிராம அலுவலர் பிரிவு :- ...........................................................................................
04. மாவட்டம் :- .....................................................................................................................
05. பிறந்த திகதி :- ................. ஆண்டு .................மாதம் ....................திகதி
06. விண்ணப்பப்படிவத்தைப் பொறுப்பேற்கும் இறுதித் திகதியன்று (2016...............) வயது
வருடங்கள் ................. மாதங்கள்.................... நாட்கள் .......................

07. ஆண்/பெண் பால் :- ............................................

08. இலங்கைப் பிரஜையா? அவ்வாறாயின் பரம்பரை மூலமா, பதிவு மூலமா என்பது தொடர்பில் ......................................

09. தேசிய அடையாள அட்டை இலக்கம் :- ...................................................................

10. தொலைபேசி இலக்கம் :- ..........................................................................................

11. திருமணமானவர் /திருமணமாகாதவர் :- ..............................................................................

12. முதல் நியமனத் திகதி :- ...............................................

13. கல்வித் தகைமை :-

13.1. விண்ணப்பதாரி இறுதியாகச் சித்தியடைந்த வகுப்பு :- ...............................................

13.2. க.பொ.த (சா.த) பரீட்சை :-

(i) ஆண்டு :- ........................ மாதம் :- ........................

(ii) பரீட்சைச் சுட்டெண் :- ........................

(iii) பெறுபேறுகள் :-

| பாடங்கள் | சித்தி | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 5. | |
| 2. | | 6. | |
| 3. | | 7. | |
| 4. | | 8. | |

13.3. கா.பொ.த (உ.த) பரீட்சை

(i) ஆண்டு :- ........................ மாதம் :- ........................

(ii) பரீட்சைச் சுட்டெண் :- ........................

(iii) பெறுபேறுகள் :-

| பாடங்கள் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

14. தொழில்சார் தகைமை மற்றும் அனுபவம் :- ....................................................................

15. ஏனைய தகைமைகள் :- ..........................................................................................

16. தாங்கள் எப்போதாவது குற்றச் செயலுக்காக நீதிமன்றத்தினால் தண்டிக்கப்பட்டுள்ளீரா? இல்லையா? என்பது தொடர்பில் :-

17. தாங்கள் ஏற்கனவே இந் நகர சபையில் நிரந்தர, பதிலீடு, சமயாசமய, தற்காலிக, செயற்திட்டத்தில் சேவையாற்றியுள்ளீரா?
அவ்வாறாயின் சேவைக்காலம் மற்றும் விபரங்கள் :- ...................................

18. பதவி :- ...................................

19. சேவைக்காலம் :- வருடங்கள் ................. மாதங்கள் ................................... நாட்கள் .................

20. கடந்த 05 ஆண்டுகளுக்குள் ஒழுக்காற்றுத் தண்டனைக்குட்பட்டுள்ளீரா?

இவ் விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவு மற்றும் நம்பிக்கைக்கமைய உண்மையானதும் சரியானதும் என்றும் உறுதிப்படுத்துகிறேன். இவ் ஆட்சேர்ப்பு ஒழுங்கு விதிமுறைகளுக்கமைய என்னால் உண்மைக்குப் புறம்பான

தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ளதாக ஆட்சேர்ப்புக்கு முன்னர் அல்லது பின்னர் தெரியவரும் பட்சத்தில் தகைமையற்றவர் ஆவேன் என்றும் நியமனம் பெற்றதன் பின்னர் தெரியவரின் சேவையிலிருந்து நீக்கவும் கட்டுப்பட வேண்டும் என்பதையும் அறிந்துள்ளேன்.

திகதி :- ........................ ...............................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

**தற்போது அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரர்களுக்காக திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

திரு./திருமதி/ செல்வி ......................................................................................... இந்நிறுவனத்தில் ............................................... என்ற அடிப்படையில் சேவையில் ஈடுபட்டுள்ளார். இப்பதவிக்காகத் தேர்ந்தெடுக்கப்படும் பட்சத்தில் அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும் /முடியாது /அவர் எந்தவொரு குற்றத்திற்கும் உட்படவில்லை என்றும் உறுதிப்படுத்துவதுடன் அவரினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்தை பரிந்துரை செய்து சமர்ப்பிக்கிறேன்.

திகதி :- ........................ ...............................................
திணைக்களத் தலைவரின் கையொப்பம்

8 – 857

---

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## பொல்கஹவெல பிரதேச சபை

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 02 ஆம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 198 ஆவது பிரிவின் கீழ் முதலமைச்சரும் உள்ளூராட்சி விடயத்துறைக்கு பெறுப்பான அமைச்சசருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் கீழே காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பாதைகள் மீண்டும் பெயரிடப்படுகிறது என்பதை இத்தால் அறியத்தரப்படுகிறது.

ஜே.எம். நிமல் ஜயசிங்ஹ,
பொல்கஹவெல பிரதேச சபையின் செயலாளர்.

பிரதேச சபை அலுவலகம்,
பொல்கஹவெல,
2017, யூலை 26.

**அட்டவணை**

உள்ளூராட்சி நிறுவனத்தின் பெயர் :- பொல்கஹவெல பிரதேச சபை
மாவட்டம் :- குருநாகல்

1. வீதியின் தற்போதைய பெயர் :- நாரங்கஹமுல வத்த பாதை
புதிதாக வழங்கப்பட்ட பெயர் :- டீ.டீ. மாகிரிஸ் அப்புஹாமி மாவத
வீதியின் விபரம் :- இவ்வீதி கொழும்பு குருநாகல் பிரதான வீதியிலிருந்து ஆரம்பித்து நாரங்கஹமுல வத்த, கொரொக்கஹபொதத்த மற்றும் கோன்வத்த கிராமங்களுக்கு உட்பிரவேசிக்கும் பாதையிலிருந்து குடா ஓயா பாலம் வரை 200 மீற்றர் வரையிலான பாதை.

8-687

## யட்டிநுவர பிரதேச சபை

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24(1) ஆவது பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்*

*2017 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 17 ஆம் திகதிய 2007 ஆம் இலக்கத்தைக் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தலின்படி 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24 ஆவது பிரிவின் கீழ் மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்டத்தில் யட்டிநுவர பிரதேச சபைக்குள் அமைந்துள்ள பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பாதைகள் யட்டிநுவர பிரதேச சபைக்குச் சொந்தமான பாதையென இத்தால் அறிவிக்கப்பட்டிருந்தது.*

*இது பற்றி இப்பிரதேசத்தின் பொதுமக்கள் அல்லது பாதையுடன் சம்பந்தப்படும் காணி உரிமையாளர்கள் எவரும் இருப்பின், தமது உரித்துரிமையை அல்லது எதிர்ப்பைக் காட்ட வேண்டுமெனின், இந்த அறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட ஒரு மாத காலத்துக்குள் தமது உரித்துரிமையை நிருபிப்பதற்கென 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24(2) ஆவது பிரிவின்படி செயற்படுமாறு அறிவிக்கப்பட்டிருந்தது.*

*எனினும், இந்தக் கால எல்லைக்குள் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24(2) ஆவது பிரிவின் கீழ் செயற்படவில்லை என்பதனால், குறித்த வர்த்தமானி அறிவித்தலில் வெளிப்படுத்தப்பட்டவாறு பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பாதைகள் யட்டிநுவர பிரதேச சபைக்கு உரித்தான பாதையாகக் கொள்ளப்பட்டு நிரந்தரமாகப் பராமரிக்கப்பட்டு வரும் என்பதை இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.*

*டபிள்யூ.ஏ.எல்.துஷாரி ஜயரத்ன,*
*செயலாளர்,*
*யட்டிநுவர பிரதேச சபை.*

*யட்டிநுவர பிரதேச சபைஅலுவலகம்,*
*எம்பில்மீகம,*
*பிலிமதலாவ.*

| தொடர் இல. | பாதையின் பெயர் | ஆரம்பம் | முடிவு | இடதுபக்கம் | வலதுபக்கம் | நீளம் மீற்றர் | அகலம் மீற்றர் | நில வரைபட உறுதி இல. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | தெவட்ட வீதி | புவக்கஹகும் புற (ரேணுகா கீதானி வீட்டு அருகில்) | பிரகத்தி மாவத்த வரை | 1. டபிள்யூ. ஜீ.என். ஜயசேக்கர<br>2. ரேணுகா ஜீ. த சில்வா<br>3. மானெல் சில்வா<br>4. ஐ.டி.சி. நிரோஷி<br>5. எல். ஜீ. சமன்<br>6. எல். ஜீ. பீ. ஜயந்த<br>7. கே. ஜீ. இந்திராணி ஜயசேக்கர | 1. அனுர பண்டார<br>2. ஹர்ஷ விஜேகோன்<br>3. எஸ். கே. ரத்நாயக்க<br>4. கே. எம். ரீ. பண்டார<br>5. பீ. ஜீ. டி. பிரியசாந்த<br>6. டி.ஏ.ஜீ. தம்மிக்க | 100 | 1.8 மீ. | 2016/174 |
| 02 | தெல்தெனிய அம்பகஸ்தன்ன வீதி | தெல்தெனிய | கலபிட்ட மடவத்த | 1. ஜீ.யூ. சீலவதி<br>2. எஸ்.ஜீ. டபிள்யூ. குணரத்ன<br>3. கே. வை. ரணவீர<br>4. டி. மாலகம்மன<br>5. பீ. டபிள்யூ. ஜினேந்தரதாச<br>6. பீ. டபிள்யூ. ஜே. ஜயவர்தன<br>7. பீ. டபிள்யூ. சீ. ஜயவர்தன<br>8. என். அபேசிங்ஹ | 1. எஸ். சமரநாயக்க<br>2. ஓ.மாலகம்மன<br>3. என். அபேசிங்ஹ<br>4. கே. திசாநாயக்க<br>5. யூ.ஜீ. ப்ரியந்தி<br>6. எல். குணவர்தன | 258.80 | 2.43 மீ. | 2032/A |

8-553

## சூரியவெவ பிரதேச சபை

அருவருக்கத்தக்க, ஆபத்தான வியாபாரங்கள்

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 9(3) ஆம் பிரிவின் கீழ் சூரியவெவ பிரதேச சபையின் செயலாளராகிய எனக்கு கிடைத்த அதிகாரத்தின் பிரகாரம் மற்றும் 2012.08.17 ஆம் திகதி சூரியவெவ பிரதேச சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டதும் 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவன (அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் தெண் மாகாகண சபை உள்ளூராட்சி நிர்மாணத்துறை பொருப்பமைச்சரால் அமைக்கப்பட்டதும், 1988 ஒகத்து 23 ஆம் திகதிய 520/7 இலக்கம் கொண்ட இலங்கைச் சனநாயக சோலிசக் குடியாரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும், தென் மாகாண சபையினால் அனுமதித்து ஏற்றுக்கொள்ளப்பட்டதும், அனுமதிக்கப்பட்ட துணைவிதிகளின் முதலாம் மற்றும் இரண்டாம் பகுதிகளில் 1 - 42 வரையான பொதுத் துணைவிதிகளுக்குரிய இலக்கம் 21 ஆம் பிரிவாகிய அருவருக்கத்தக்க மற்றும் ஆபத்தான வியாபாரத்தின் கீழ், அட்டவணை I, II, III இல் குறித்த வியாபாரங்கள் ஆபத்தான மற்றும் அருவருக்கத்தக்க வியாபாரங்களாக 2016.10.11 ஆந் திகதயி நடத்தப்பட்ட நிதி மற்றும் கொள்கை செயற்குழுவினால் சிபார்சு செய்ததன் பின்னர் 2016.10.12 ஆந் திகதிய தீர்மான இலக்கம் 10/20 இன் கீழ் என்னால் அவற்றை அனுமதிப்பதற்கு தீர்மானித்ததாக இதன் மூலம் அறியத் தருகின்றேன்.*

*டபிள்யூ. ஜீ. கருணாரத்ன,*
*செயலாளர்,*
*சூரியவெவ பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*சூரியவெவ,*
*2016, ஒற்றோபர் 12 .*

***அட்டவணை***

***அருவருக்கத்தக்க வியாபாரங்கள்***

1. பால் உணவு உற்பத்தி செய்யும் நிலையம்
2. கோழிப்பண்ணை
3. வாகனம் சர்விஸ் செய்யும் நிலையம்
4. சுன்னாம்பு மற்றும் செங்கல் சூளை நடாத்தல்
5. மின் சக்தி நெசவு ஆலை
6. மிருகப் பண்ணை
7. நெல் ஆலை
8. முற்சக்கர வண்டி பழுதபார்த்தல் நிலையம் நடாத்தல்
9. விவசாய இயந்திரம் பழுது பார்க்கும் நிலையம் நடாத்தல்
10. மோட்டார் சைக்கில் மற்றும் மிதி வண்டி பழுது பாரக்கும் நிலையம் நடாத்தல்
11. உருக்கு நிலையம் நடாத்தல்
12. மோட்டார் வாகனம் பழுதுபார்க்கும் நிலையம் நடாத்தல்
13. அரைக்கும் ஆலை
14. டயர், டியூப் வொல்கனைஸ் பண்ணும் நிலையம் நடாத்தல்
15. கால் நடைப்பட்டி
16. மரணச் சடங்கு சேவை வழங்கும் நிலையம் நடாத்தல்

***ஆபத்தான வியாபாரங்கள்***

1. கல் ஆலை நடாத்தல்
2. இயந்திரங்கள் மூலம் கருங்கள் உற்பத்தி செய்யும் நிலையம்

3. விவசாய இரசாயன பொருட்கள் களஞ்சியப்படுத்தி விற்பனை செய்யும் நிலையம் நடாத்தல்
4. வேல்டின் வெலைத்தளம் நடாத்தல்
5. அசிட் வகைகள் உற்பத்தி செய்யும் நிலையம் நடாத்தல்
6. காஸ் விற்பனை நிலையம் நடாத்தல்
7. அகற்றப்பட்ட பொருட்கள் களஞ்சியப்படுத்தல் மற்றும் விற்பனை நிலையம்
8. பய்பர் கிலாஸ் விற்பனை நிலையம் நடாத்தல்
9. மின் இயந்திர வேலைத்தளம்
10. விவசாயப் பொருட்கள் உற்பத்தி நிலையம்
11. கொங்கிரீட் வேலைத் தளம்
12. உடல் அலங்கார நிலையம் நடாத்தல்

**அருவருக்கத்தக்க மற்றும் ஆபத்தான வியாபாரங்கள் நடாத்தல்**

01. கராஜ் நடாத்தல்
02. மர ஆலை நடாத்தல்
03. பசளை விற்பனை செய்யும் நிலையம் நடாத்தல்
04. இயந்திரங்கள் மூலம் கொங்கிரீட் கற்கள் உடைக்கும் நிலையம் நடாத்தல்
05. குளிரூட்டிகள் குளிர் சாதனப் பெட்டிகள் பழுதுபார்க்கும் நிலையம் நடாத்தல்
06. தச்சு வேலைத்தளம் நடாத்தல்
07. பட்டறை நடாத்தல்
08. பற்றரி சாஜ் செய்யும் நிலையம் நடாத்தல்
09. தார் உருக்கு கலப்பு இயந்திரம் நடாத்தல்
10. கொங்கிரீட் கலப்பு இயந்திரம் நடாத்தல்
11. இரசாயன அறை வசதிகள் வழங்கும் நிலையம் நடாத்தல்
12. பற் சிகிச்சை அறை நடாத்தல்
13. சிரட்டைக் கறி உற்பத்தி செய்து விற்பனை செய்யும் நிலையம் நடாத்தல்

8- 556

---

**சாவகச்சேரி நகராட்சி மன்றம்**

*1952 ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் (நியமத் துணைவிதிகள்) சட்டம்.*

*1952 ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க, (261 அத்தியாயம்) உள்ளூர் அதிகார சபைகள் (நியமத் துணை விதிகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவில் (1) வது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி 2017 ஆம் ஆண்டு யூலை மாதம் 17 ஆந் திகதி சாவகச்சேரி நகராட்சி மன்றத்தால் கீழ்க் கண்ட தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

கார்த்திகேசு சண்முகதாசன்,
செயலாளர்,
சாவகச்சேரி நகராட்சி மன்றம்.

நகராட்சி மன்ற அலுவலகம்,
சாவகச்சேரி,
2017 யூலை 24.

## *48 ஆம் இலக்க 2017.07.17 ஆம் திகதிய தீர்மானம்*

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான) சட்டத்தின் 2 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் (அ) பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் (நியமத் துணை விதிகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ், வடக்கு மாகாண சபையின் உள்ளூராட்சி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின்படி வடக்கு மாகாண உள்ளூராட்சி விடயங்களிற்குப் பொறுப்பான அமைச்சரினால் தயாரிக்கப்பட்டு 2016.02.02 ஆந் திகதிய 1952/15 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டு வடக்கு மாகாண சபையால் 2017.02.21 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டு 2017.03.24 ஆம் திகதிய 2011/25 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியின் IV (அ) பகுதியில் பிரசுரிக்கப்பட்டதுமான அத்தியாயம் 1-6 வரையான வடக்கு மாகாண நகர சபைகளுக்கான துணைவிதிகள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் திகதியிலிருந்து ஏற்றுக்கொள்வது என்றும் சாவகச்சேரி நகராட்சி மன்ற பிரதேசத்தில் நடைமுறைப்படுத்துவது என்றும் மேலே கூறப்பட்ட 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க (அத்தியாயம் 261) நியமத் துணைவிதிகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் சாவகச்சேரி நகராட்சி மன்றம் தீர்மானிக்கின்றது.*

*8-626*

---

## பொல்கஹவெல பிரதேச சபை

*1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி சபை (நிலையான துணை விதி) சட்டம்*

*1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி சபை (நிலையான துணை விதி) சட்டத்தின் 3 ஆம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 9 ஆம் பிரிவில் (3) ஆம் உப பிரிவின் கீழ் கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரப்படி பொல்கஹவெல பிரதேச சபையின் செயலாளர் ஜயசிங்ஹ முதியன்சேலாகே நிமல் ஜயசிங்ஹ ஆகிய நான், வீடு சொத்து அபிவிருத்தி மற்றும் காணி துண்டிடப்பட்டு விற்பனை செய்தல் பற்றிய துணை விதி பொல்கஹவெல பிரதேச சபை அதிகாரப்பிரிவில் நடைமுறப்படுத்தப்பட வேண்டும் என்று 2017.06.30 ஆந் திகதிய 994 ஆம் இலக்கமுடைய தீர்மானத்தின் கீழ் என்னால் தீர்மானிக்கப்பட்டது என்று இத்துடன் அறிவித்தல் விடுக்கின்றேன்.*

ஜே. எம். நிமல் ஜயசிங்ஹ,
செயலாளர் மற்றும் செயல்கள் கடமைகளை
நிறைவேற்றுகின்ற உத்தியோகத்தர்,
பொல்கஹவெல பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
பொல்கஹவெல,
*2017 யூலை 24.*

### *தீர்மானம்*

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (இடைநிலைச் சட்டத்தின்) சட்டத்தின் 2 ஆம் பிரிவில் (1) ஆம் பிரிவில் (1) ஆம் உப பிரிவில் (அ) பந்தியுடன் வாசிக்கப்பட வேண்டிய (261 ஆம் அத்தியாயமான) 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவன (இடைநிலைச் சட்டம்) சட்டத்தில் (2) ஆம் பிரிவில் (1) ஆம் உப பந்தியின் கீழ் வடமேல் மாகாணத்தின் மாகாண சபையின் உள்ளூராட்சி மன்ற விடயப் பொறுப்புடைய அமைச்சருக்கு வழுங்கப்பட்டுள்ள அதிகாரப்படி வடமேல் மாகாணத்தின் உள்ளூராட்சி விடயப் பொறுப்புடைய அமைச்சரினால் ஒழுங்கமைக்கப்பட்ட 2003.11.28 ஆந் திகதி இலக்கம் 1317 இற்கான இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசின் வர்த்தமானியில் IV(அ) பகுதியில் பிரசுரிக்கப்பட்ட வடமேல் மாகாணத்தின் வீடு சொத்து மற்றும் அபிவிருத்தி மற்றும் காணி துண்டிடப்பட்டு விற்பனை செய்தல் பற்றிய துணை விதி மற்றும் அவ்வர்த்தமானி அறிவித்தலினை திருத்தியமைத்து இலங்கைச் சனநாயா சோஷலிச குடியரசின் (அதிவிசேட) வர்திதமயானியில் IV(அ) பகுதியில் 2014.10.01 ஆந் திகதி 1882/22 ஆம் இலக்கத்தினால் அறிவித்தலுக்கு உட்படுத்தப்பட்டதும் வீடு சொத்து அபிவிருத்தி மற்றும் காணி துண்டிடப்பட்டு விற்பனை செய்வது பற்றிய துணை விதி மற்றும் உரிய வர்த்தமானி அறிவித்தலின் திருத்தமாக இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசின் (அதிவிசேட) வர்த்தமானியில் IV(அ) பகுதியில் 2015.01.20 ஆந் திகதி 1898/28 ஆம் இலக்கத்தினால் அறிவித்தல் விடுவிக்கப்பட்ட வீடு, சொத்து*

அபிவிருத்தி மற்றும் காணி துண்டிடப்பட்டு விற்பனை செய்வது பற்றிய துணை விதிக்கு உரிய திருத்தம் 2014.10.01 ஆந் திகதி 1882/22 இற்கான (அதிவிசேட) வர்த்தமானியில் IV(அ) பகுதியில் பிரசுரிக்கப்பட் வீடு சொத்து அபிவிருத்தி மற்றும் காணி துண்டிடப்பட்டு விற்பனை செய்வது பற்றிய துணை விதி திருத்தியமைத்து பிரசுரிக்கப்பட்டதும் 2015.08.28 ஆந் திகதி இலக்கம் 1929/45 இல் பிரசுரிக்கப்பட்டதும் வீடு சொத்து அபிவிருத்தி மற்றும் காணி துண்டிடப்பட்டு விற்பனை செய்வது பற்றிய துணை விதிக்கு உரிய திருத்தம் 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி சபை துணை விதியின் 3 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள சட்டதிட்டங்களுக்கமைய பொல்கஹவெல பிரதேச சபை அதிகாரப் பிரிவில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவின் ஒழுங்கு விதிகளுக்ககமைய நான் தீர்மானிக்கின்றேன்.

8- 666

---

## மஹரகம நரசபை

### நகரசபைக் கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 50 ஆம் மற்றும் 52 ஆம் பிரிவுகளின் நியதிகளின்படியிலான அறிவித்தல்

நகரசபைக் கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 50 ஆம் மற்றும் 52 ஆம் பிரிவுகளின் நியதிகளின்படி மேல் மாகாணத்தில் கொழும்பு மாவட்டத்தில் உள்ள மஹரகம பிரதேச செயலாளர் பிரிவில் மஹரகம நகரசபையின் எல்லைகளில் அமைந்துள்ள பின்வரும் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட வீதிகள் மஹரகம நகர சபைக்கு உரிய வீதிகளாக பிரகடனப்படுத்தப்படல் வேண்டும் என்று பொதுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன்படி அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட வீதிகள் மஹரகம நகர சபையினால் உடைமையாக்கப்படுகின்றன எனறு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2. பொதுமக்கள் அல்லது உரிய காணி உடைமையாளர்களிடமிருந்து இந்த விடயம் குறித்து ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் அத்தகைய ஆட்சேபனைகள் பொருட்டான காரணங்கள் வர்த்தமானியில் இந்த அறிவித்தல் பிரிசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு மாத காலப்பகுதியினுள் எழுத்தில் கொடுக்கப்படல் வேண்டும்.

3. ஆட்சேபனைகள் எதுவும் குறிப்பிடப்பட்ட காலப்பகுதியினுள் கெரிவிக்கப்படா விடில் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட வீதிகள் மஹரகம நகரசபைக்கு சொந்தமானதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு கட்டுப்படுத்தப்படும் என்று இத்தால் பொதுமக்களின் தகவல் பொருட்டு அறிவிக்கப்படுகின்றது.

செயலாளர் மற்றும்,
சபையிற் கருமங்களுக்கான பொறுப்பாளர்,
மஹரகம நகரசபை.

நகர சபை அலுவலகம்,
மஹரகம.

| தொடர் இல. | திட்ட இலக்கம் மற்றும் திகதி | வீதியின் பெயர் | வீதியின் நீளம் | வீதியின் அகலம் | அட்டவணையின் படி எல்லைகள் |
|---|---|---|---|---|---|
| 01) | தி. இல. : 5184 | தெபாணம சமதி மாவத்தை 2 ஆம் ஒழுங்கை | 489-0 அடி | 20-19 அடி | வடக்கில்: தனியார் காணி<br>தெற்கில் : சமகி மாவத்தை<br>மேற்கு : தனியார் காணி<br>கிழக்கில் : தனியார் காணி |
| | திகதி : 2008.01.05 | | 87-0 அடி | 15-0 அடி | |

8-667

## ரத்கம பிரதேச சபை

*1987 ஆம் ஆண்டின் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் 139 ஆம் பிரிவினால் பிரதேச சபைக்கு அளிக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களின் பிரகாரம் ரத்கம பிரதேச சபையால் 2017.06.29 ஆந் திகதிய தீர்மான இலக்கம் 1258 இன் கீழ் கீழே காட்டப்பட்டிருக்கும் தீர்மானம் சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதென பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*ஜயவர்தன கமகே வீரசேன,*
*செயலாளர்,*
*ரத்தம பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*ரத்கம.*
*2017, யூலை 10.*

### தீர்மானம்

*1987 ஆம் ஆண்டின் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் 139 ஆம் பிரிவினால் பிரதேச சபைக்கு அளிக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களின் பிரகாரம், ரத்கம பிரதேச சபை அதிகார எல்லைக்குள் மதிப்பீட்டு வரி செயல்களுக்காக யாதேனும் வீடு, கட்டிடம், காணி அல்லது குடிசை வருடாந்த பெறுமதி மதிப்பீடு செய்யும் செயலுக்காக மற்றும் /அல்லது ஏக்கர் வரி செயகளுக்காக யாதேனும் பயிர் செய்யப்பட்ட காணி பிரமாணம் மதிப்பீடு செய்வதற்காக, பிரதேச சபை அதிகார எல்லைக்குள் செய்யும் அபிவிருத்தி செயலுக்காக திட்டமிடுவதற்கு வசதி ஏற்படுத்துவதற்கு மற்றும் 2016 ஆம் ஆண்டின் 12 இலக்க தகவல் அறியும் உரிமை சம்பந்தமான சட்ட பிரிவுகளின் 3 ஆவது மற்றும் 5 ஆவது பிரிவுகளின் செயல்களுக்காக தகவல் முறைமை உருவாக்குவதற்காக அதன் ஏதேனும் சொத்தின் உரிமையாளருக்கு அல்லது வதிவாளருக்கு அதன் வாடகை அல்லது வருடாந்த பெறுமதியை அல்லது அதன் விஸ்தீரணத்தை அல்லது வேறு காரணம் சம்பந்தமான தவணை அறிக்கை சமர்பிக்க வேண்டும் என்று கட்டளையிட வேண்டும் என்று ரத்கம பிரதேச சபையால் தீர்மானிக்கப்பட்டது.*

*8 - 886*